செ.வெ.எண்.496/2021 நாள்.01.11.2021

**திருப்பத்தூர் மாவட்டம் கதிரிமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளியில் மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவினை மாணவ, மாணவியர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் சேர்ந்து சாப்பிட்டு பார்த்து ஆய்வு மேற்கொண்டார்கள்.**

திருப்பத்தூர் மாவட்டம் கதிரிமங்கலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவர்கள் வரைந்துள்ள ஓவியங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்கள். அதனை தொடர்ந்து மயில், மனிதனின் முகம் மற்றும் எலி ஆகிய ஓவியங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வரைந்தார்கள். மேலும் மாணவர்களுக்கு காகித கப்பலை செய்து காண்பித்தார்கள். பின்னர் திருப்பத்தூர் மாவட்டம் கதிரிமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளியில் மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் சாப்பிட்டு பார்த்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர் ஒன்றியத்தில் 184 பள்ளிகள், ஜோலார்பேட்டை ஒன்றியத்தில் 176 பள்ளிகள், கந்திலி ஒன்றியத்தில் 173 பள்ளிகள், ஆலங்காயம் ஒன்றியத்தில் 117 பள்ளிகள், நாட்றம்பள்ளி ஒன்றியத்தில் 143 பள்ளிகள், மாதனூர் ஒன்றியத்தில் 201 பள்ளிகள் என 800 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் 194 தனியார் பள்ளிகளும் பின்பற்றபட வேண்டும். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் மொத்தம் முதலாம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை 1,30,430 மாணவர்கள் படித்து வருகிறார்கள். நமது மாவட்டத்தில் முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை 98 ஆயிரத்து 238 மாணவர்கள் படித்து வருகிறார்கள். இவர்களில் இன்று 66 ஆயிரத்து 663 மாணவ, மாணவியர்கள் பள்ளிகளுக்கு புதியதாக வருகைபுரிந்து பயின்று வருகிறார்கள்.

மேலும் பள்ளிகளுக்கு வருகைபுரிந்துள்ள மாணவர்கள் கொரோனா முன்னெச்சரிக்கை தடுப்பு பணிகளான கிருமிநாசினி பயன்படுத்தி மாணவர்கள் அனைவரும் கைகளை சுத்தம் செய்யப்படுவதையும், மாணவர்கள் முகக்கவசம் அணிந்துள்ளதையும், சமூக இடைவெளியை அவசியம் கடைபிடிக்கப்பட்டுள்ளதையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வுகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.செல்வராசு, மாவட்ட கல்வி அலுவலர் திரு.வேதபிரகாஷ், உதவி திட்ட அலுவலர் திருமதி.விஜயகுமாரி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பிரேம்குமார், திரு.சந்திரன், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் திருமதி.இலலிதா மோகன்குமார், பள்ளி ஆய்வாளர் திரு.தாமோதரன், ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.மாரி இளையராஜா, தலைமை ஆசிரியர்கள் திருமதி.ஜெயந்திமரகதம், திருமதி.சிவசங்கரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**